# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8033646

1. District மாவட்டம் : திண்டுக்கல் | PS: காவல்நிலையம் : | Year: ஆண்டு 2017 | FIR No.: மு.த.அ. எண் 06/17 | Date: நாள் 01 08

2. (i) Act சட்டம்: PC Act 1988 — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 21.06.17 முதல் 31.07.17
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01 08 17 — Time : நேரம் 08 15
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 2 km தென்மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி நில அளவை பிரிவு, திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகம் திண்டுக்கல் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. சேகரன்
   (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 38
   (d) Nationality நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மென்பொருள் பொறியாளர்
   (g) Address : முகவரி D.No 4/1 முதல் தெரு [illegible]

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. சரவணன் சர்வேயர் திண்டுக்கல் மேற்கு தாலுகா திண்டுக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துசமர்ப்பிக்கிறேன்:திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளரான நான் இன்று 01.08.2017ம் தேதி காலை 08.15 மணியளவில் அலுவலகத்தில் இருந்தபோது திருச்சி மாவட்டம், பொன்மலை அஞ்சல், பொன்னேரி புரம், முதல் தெரு, கதவு எண். 4/1 ல் குடியிருந்து வரும் அருணாசலம் மகன் A.கணேசன் என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று விசாரித்ததில் வாதி மற்றும் அவரது மனைவி பெயரில் திண்டுக்கல் மாவட்டம் சீலப்பாடி, பூதிபுரம், அகரத்தில் உள்ள காலி வீட்டு மனையிடங்களுக்கு அவர்களின் பெயரில் பட்டா மாறுதல் பெறுவதற்கு திரு.சரவணன், சர்வேயர், திண்டுக்கல் மேற்கு தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் தனது பரிந்துரையினை செய்து மேலனுப்புவதாக லஞ்சமாக கேட்ட பணம் ரூ.15,000/- கேட்டதாக இருந்தது. மேற்படி புகாரின் நகலை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பியதின் பேரில் பூர்வாங்க விசாரணை PE.No.283/2017/REV/DL, நாள்:01.08.2017-ன்படி விசாரணை மேற்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் P.E.No.283/2017/REV/DL, நாள்:01.08.2017-ன்படி பதிவு செய்யப்பட்டு பூர்வாங்க விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன் செயலாக தலைமைக்காவலர் 1173 திரு.R.வெங்கடாசலபதி அவர்களை அனுப்பி திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகத்தில் உள்ள நிலஅளவை பிரிவு அலுவலகம் சென்று எதிரி திருமதி.சரவணன் அவர்களை சந்தித்து வாதியிடம் லஞ்சப்பணம்கேட்பது சம்மந்தமாக குரல் பதிவு செய்ய அனுப்பப்பட்டது. அதன்படி வாதி திண்டுக்கல் மேற்கு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1.8.2017

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.08.17

Name: பெயர் ..........................
Rank: நிலை .................. No. எண் ..........

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:6/2017 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

தாலுகா அலுவலகத்தில் உள்ள நிலஅளவை பிரிவு அலுவலகம் சென்று எதிரியை பார்த்தபோது எதிரி இல்லாததால் எதிரியின் அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு பேசியபோது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள ஸ்டேட் பேங்க் ATM அருகில் வரசொன்னதாகவும், அதன்பேரில் அங்கு சென்று எதிரியை சந்தித்தபோது நடந்த உரையாடல்கள் குரல் பதிவு செய்யப்பட்டது. அதில் எதிரி வாதியிடம் லஞ்சப்பணம் ரூ.15,000/- கேட்பது சம்மந்தமான வாதியின் புகார் மனுவின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்டது. அதன் பிறகு வாதி மற்றும் எதிரி ஆகியோர்களின் முன் நடத்தை பற்றியும் விசாரணை செய்தும், காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் ஒப்புதலை 01.08.2017ம் தேதி காலை 10.55 மணிக்கு பெற்றும், மேற்படி சர்வேயர் சரவணன் அவர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 7ன் கீழ் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பதால் 01.08.2017ம் தேதி காலை 11.00 மணிக்கு திண்டுக்கல் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.06/2017, பிரிவு 7 ஊழல் தடுப்புச்சட்டம் 1988ன்படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் விபரம் பின்வருமாறு பெறுநர் உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல், நான் மேற்சொன்ன முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் MCA படித்துள்ளேன். எனது மனைவி பெயர் திருமதி.திவ்யா. எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. நான் பெங்களூரில் Exilant Technologies Private Ltd., என்ற நிறுவனத்தில் மென்பொருள் பொறியாளராக பணிபுரிந்து வருகின்றேன். எனக்கு என்னுடைய பெயரில் சீலப்பாடி சர்வே எண். 675/1 ல் பிளாட் எண். 25, சீலப்பாடி சர்வே எண். 675/1 ல் பிளாட் எண். 24, சீலப்பாடி சர்வே எண். 676 ல் பிளாட் எண். 18 மற்றும் தாடிக்கொம்பு அகரத்தில் சர்வே எண்.2443/2N-ல் பிளாட் எண்.372 உள்ளது. எனது மனைவி பெயரில் தாடிக்கொம்பு அகரத்தில் சர்வே எண்.2440-ல் பிளாட் எண்.373 மற்றும் பூதிபுரம் சர்வே எண். 2243/1A1 பிளாட் எண். 10 உள்ளது. இந்நிலையில் கடந்த 21.04.2017-ம் தேதி நான் திண்டுக்கல் வந்து திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகத்தில் உள்ள இ-பொது சேவை மையத்தில் மேற்சொன்ன காலி மனைபிடங்களுக்கு எனது பெயரிலும் மற்றும் எனது மனைவி பெயரிலும் பட்டா மாறுதல் பெறுவதற்காக விண்ணப்பித்தேன். அதற்கு ரசீதும் பெற்றுள்ளேன். அதன் விபரம் பின்வருமாறு. (1) 2017/0105/13/030979 (2) 2017/0105/13/030947 (3)2017/0105/13/030955 (4) 2017/0105/13/030973 (5) 2017/0105/13/030969 மற்றும் (6) 2017/0105/13/030963. அதன் பின்பு கடந்த 23.06.2017-ம் தேதி ஓய்வு பெற்ற சர்வேயர் திரு.பன்னீர்செல்வம் என்பவர் அவருடைய அலைபேசியிலிருந்து என்னை தொடர்பு கொண்டு திண்டுக்கல் மேற்கு தாலுகா சர்வேயர் திரு.சரவணன் உங்கள் இடங்களை அளப்பது சம்மந்தமாக நேரில் வருமாறு கூறியதாகவும், எனவே திரு.சரவணன் சர்வேயர் அவர்களின் அலைபேசி எண். 9626741472-ஐ கொடுத்து அவரிடம் தொடர்பு கொள்ளுமாறு கூறினார். அதன் பின்பு எனது அலைபேசி எண்.9886971760-லிருந்து திரு.சரவணன், சர்வேயர், திண்டுக்கல் மேற்கு தாலுகா என்பவரின் அலைபேசி எண்ணிற்கு கடந்த 24.06.2017 அன்று காலை 09.50 சுமாருக்கு தொடர்புகொண்டு எனது விண்ணப்பங்கள் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் சீலப்பாடி ஒரு சப் டிவிசன் எனவும், பூதிபுரம் ஒரு சப் டிவிசன் எனவும், அகரத்தில் உள்ள இரண்டு காலிமனைபிடங்களில் ஒன்று எனது மனைவியின் பெயரில் உள்ளதால் இரண்டு சப்

டிவிசன் எனவும், ஆக மொத்தம் நான்கு சப் டிவிசன் எனவும், ஒரு சப் டிவிசனுக்கு ரூ.5,000/- வீதம் மொத்தமாக ரூ.20,000/- கேட்டார். அப்பொழுது நான், ரூ.20,000/-ம் அரசுக்கு கட்டவேண்டிய பணமா என்றுக் கேட்டேன். அதற்கு அவர், இல்லை மேற்கண்ட இடங்களை அளந்து தாசில்தாருக்கு எனது பரிந்துரையினை அனுப்புவதற்கு ஆகும் செலவு எனக் கூறினார். நான் பணத்தை புரட்டிவிட்டு வருகின்றேன் எனக் கூறிவிட்டு அலைபேசி இணைப்பை துண்டித்துவிட்டேன். அதன் பின்பு நான் 31.07.2017-ம் தேதி திரு.சரவணன், சர்வேயர், திண்டுக்கல் மேற்கு தாலுகா என்பவரை அலைபேசியில் தொடர்பு கொண்டு எனது விண்ணப்பங்கள் சம்மந்தமாக கேட்டேன், அதற்கு அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் நுழைவு வாயிலின் அருகே வந்து அவரை சந்திக்குமாறு கூறினார். நான் மதியம் சுமார் 1 மணிக்கு திரு.சரவணன் அவர்களை அவர் சொன்ன இடத்தில் நேரில் சந்தித்து விபரம் கேட்டேன். உங்களது மனுக்கள் அனைத்தும் என்னிடம்தான் நிலுவையில் உள்ளது எனவும், மேலும் ஒரு சப் டிவிசனுக்கு ரூ.4,000/- வீதம் மொத்தமாக நான்கு சப் டிவிசனுக்கு ரூ.16,000/- கொடுத்தால்தான் அவருடைய பரிந்துரையினை செய்து மேலனுப்புவதாக கறாராக கூறிவிட்டார். நான் சம்பளம் இன்னும் வாங்கவில்லை எனவும், கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்றும் கேட்டேன். அதற்கு அவர் கடைசியாக ரூ.15,000/- கொண்டுவருமாறு கூறினார். மேற்கண்ட எனது மற்றும் எனது மனைவியின் பெயரில் உள்ள காலி வீட்டு மனையிடங்களுக்கு பட்டா மாறுதல் பெறுவதற்கு ரூ.15,000/- லஞ்சமாக திண்டுக்கல் மேற்கு தாலுகா சர்வேயர் திரு.சரவணன் அவர்களுக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லாததால் என்னிடம் ரூ.15,000/- லஞ்சமாக கேட்ட சர்வேயர் திரு.சரவணன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு, இந்த மனுவை தயாரித்து கொடுக்கின்றேன். இம்மனுவுடன் மேற்படி அலுவலகத்தில் எனது மற்றும் எனது மனைவி பெயரில் உள்ள காலி மனையிடங்களுக்கு பட்டா மாறுதல் கேட்டு ஆன் லைனில் பதிவு செய்த ஒப்புதல் சீட்டு மற்றும் காலி மனையிடங்கள் உள்ள ஆறு சர்வே எண்களையும் சர்வே செய்வதற்காக பாரத ஸ்டேட் வங்கியில் பணம் கட்டியதற்கான சலான் ஆகியவற்றின் நகலினை இணைத்தும், மேலும் திரு.சரவணன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.15,000/-ம் கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/xxxxxx திரு.A.கணேசன், 01.08.2017. Sir, Received the complaint on 01.08.2017 at 08.15 hrs and the same was intimated to the Superintendent of Police, Sothern Range, DVAC, Chennai for necessary orders, Sd/-xxx Tmt.J.Rupa Geetharani, 01,08,2017, Inspector of Police, V&AC., Dindigul, As per the order of the Superintendent of Police, Southern range, Vigilance and Anti-Corruption, Chennai in PE.283/2017/Rev/DL, dated:01.08.2017, a preliminary Enquiry was conducted, regarding the complaint. On the findings of the Preliminary Enquiry and after getting concurrence from the Superintendent of Police, Southern Range, V&AC., Chennai, the case in Dindigul V&AC., Cr.No.06/2017, u/s.7of Prevention of Corruption Act, 1988 was registered on 01.08.2017 at 11.00hrs. Sd/xxxx J.Rupa Geetharani, 01.08.2017, Inspector, V&AC., Dindigul. பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு அதனுடன் இணைந்த ஆவணங்கள் மற்றும் குரல் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு ஒன்று ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, திண்டுக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.